# இலக்கண நூல்களின் வரலாறு

## தொல்காப்பியம்

தமிழில் கிடைத்துள்ள இலக்கண நூல்களுள் மிகப் பழமையானது தொல்காப்பியம் ஆகும். இது எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்று அதிகாரங்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு அதிகாரமும் ஒன்பது இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது.

தொல்காப்பிய பாயிரத்தில் ''**முந்து நூல்'' கண்டு முறைப்பட எண்ணி** என்றும் நூற்பாக்களில் **என்ப, என்மனார் புலவர், மொழிப, மொழிமனார்** என்றும் குறிப்பிட்டுள்ளமையால் தொல்காப்பியத்திற்கு முன்பே இலக்கண நூல்கள் இருந்துள்ளன என்பதை அறிய முடிகிறது.

**"எள்ளினின் றெண்ணெய் எடுபடுவது போல**

**இலக்கியத் தினின்றும் எடுபடுவது இலக்கணம்''**

என்ற பழைய வழக்குத் தொடரின் மூலம் இலக்கியங்கள் தோன்றின பின்பே இலக்கணங்கள் தோன்றின எனத் தெரிய வருகிறது.

தொல்காப்பியம் ஐந்திலக்கணம் கொண்டு விளங்குகிறது. எழுத்து, சொல், பொருள் என மூன்று அதிகாரங்கள் உள்ளன. ஒவ்வொரு அதிகாரமும் ஒன்பது இயலாகப் பகுக்கப்பட்டுள்ளது.

செய்யுளுக்கும் அதில் இடம் பெறும் பொருளுக்கும் இலக்கண வரையறைகளை இந்நூல் தந்துள்ளது. பழந்தமிழர் நாகரிகத்தையும், அவர்தம் வாழ்வியல் நடைமுறைகளையும் பொருள் அதிகாரம் கூறுகிறது. போர் நெறிகள் குறித்த செய்திகளை புறத்திணையிலும், அன்பின் ஐந்திணை அவற்றின் முதல் கரு, உரிப்பொருள் ஆகியவற்றை அகத்திணையியலும் கூறுகின்றன.

இந்நூலுக்கு இளம்பூரனார், சேனாவரையர், நச்சினார்க்கினியர், பேராசிரியர் முதலானோர் உரை எழுதியுள்ளார்.

## தொல்காப்பியத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட இலக்கண நூல்கள்

- எழுத்து, சொல் ஆகிய அதிகாரங்களை அடிப்படையாகக் கொண்டு **நன்னூல், நேமிநாதம்** ஆகிய நூல்கள் தோன்றின.
- சொல்லதிகாரத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு தோன்றிய நூல்கள் பிரயோக விவேகம், இலக்கணக்கொத்து ஆகியனவாகும்.
- பொருளதிகாரத்தில் உள்ள அகத்திணையியலை அடிப்படையாகக் கொண்டு **இறையனார் அகப்பொருள், நம்பியகப் பொருள் களவியல் காரிகை, மாறன் அகப்பொருள்** முதலிய நூல்கள் தோன்றின.
- புறத்திணையியலை அடிப்படையாகக் கொண்டு **புறப்பொருள் வெண்பாமாலை, பன்னிரு படலம்** ஆகிய நூல்கள் தோன்றின.
- செய்யுளியலை அடிப்படையாகக் கொண்டு **யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை** முதலிய யாப்பிலணக்க நூல்கள் தோன்றின.
- உவமவியலை அடிப்படையாகக் கொண்டு தண்டியலங்காரம், மாறனலங்காரம் முதலிய அணியிலக்கண நூல்கள் தோன்றின.

## இறையனார் அகப்பொருள் (களவியல்)

அகப்பொருள் சார்ந்த இந்நூலை இறையனார் என்பவர் இயற்றினார் என்று கூறப்படுகிறது. இந்நூல் அகம் என்பதனை களவு, கற்பு என்று இரண்டாகப் பிரித்துள்ளது. இந்நூலின் மூலப்பிரதி கிடைக்கவில்லை, எனினும்



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

இந்நூலுக்கான முழுமையான உரைப்பகுதி கிடைத்துள்ளது. இறையனார் அகப்பொருள் உரையே தமிழில் தோன்றிய முதல் உரை நூலாகும். உரை நூலின் ஆசிரியர் **நக்கீரர்** ஆவார்.

**புறப்பொருள் வெண்பா மாலை**

புறப்பொருளைப் பற்றி வெண்பா யாப்பில் கூறும் இந்நூலை இயற்றியவர் ஐயனாரிதனார். புறப்பொருளுக்குரிய இலக்கணத்தையும், இலக்கியத்தையும் இந்நூல் கொண்டுள்ளது. வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை ஆகிய பன்னிரு திணைகளின் இலக்கணத்தை துறை வகையோடு இந்நூல் விளக்குகிறது.

**யாப்பருங்கலக்காரிகை**

பணம் பற்றி விளக்கும் இந்நூலை இயற்றியவர் **அமிர்தசாகரர்** ஆவார். இந்நூலில் **உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல்** என்ற இயல்கள் அமைந்துள்ளன.

"காரிகை கற்றுக் கவிபாடுவதிலும்

பேரிகை கொட்டி பிழைப்பதுமேல்"

என்ற கூற்று இந்நூலின் பெருமையையும் அதன் யாப்பைக் கற்பதின் கடினத்தையும் உணர்த்துகிறது. இந்நூல் ஆசிரியர் யாப்பருக்கலம் என்ற மற்றொரு இலக்கண நூலையும் படைத்துள்ளார். இந்நூலுக்கு உரை எழுதியவர் குணசாகரர் ஆவார்.

**வீரசோழியம்**

தொல்காப்பியத்திற்குப் பின்னர், ஐந்திலக்கண அமைப்பில் அமைந்துள்ள இந்நூலை இயற்றியவர் **புத்தமித்திரர்** ஆவார். இந்நூலில் ஐந்து அதிகாரங்களும், பத்து படலங்களும் அமைந்துள்ளன. இந்நூல் வடமொழி, தமிழ் மொழி இரண்டிற்கும் இலக்கணம் கூற முற்படுகிறது.

**தண்டியலங்காரம்**

தமிழில் அணி இலக்கணம் கூறும் நூல்களுள் தண்டியலங்காரம் முதல் நூலாகும். வடமொழியில் உள்ள காவ்யதர்சம் என்ற நூலைத் தழுவி, இந்நூலை தண்டி என்ற புலவர் இயற்றியுள்ளார். இந்நூலில் பொதுவணியியல், பொருளணியியல், சொல்லணியியல் என்ற மூன்று இயல்கள் அமைந்துள்ளன. மொத்தம் 125 நூற்பாக்கள் உள்ளன.

1. **பொதுவணியியல்:** செய்யுள் வகை, அதன் இலக்கணம் ஆகியவை கூறப்பட்டுள்ளன.
2. **பொருளணியில்:** இந்த இயலில் தன்மையணி முதல் பாவிகவணி வரை 35 அணிகளின் இலக்கணம் கூறப்பட்டுள்ளன.
3. **சொல்லணியியல்:** மடக்கின் வகைகள், அவற்றின் இலக்கணம், சித்திரக் கவிகளின் இலக்கணம், வழு, வழுவமைதி ஆகியவை கூறப்பட்டுள்ளன.

பெருங்காப்பியத்தின் இலக்கணமும் இந்நூலில் கூறப்பட்டுள்ளது. இந்நூலுக்குப் பின்னர், சந்திராலோகம், குவலாயனந்தம், மாறனலங்காரம் போன்ற அணி இலக்கண நூல்கள் தோன்றியுள்ளன.

**நேமிநாதம்**

இந்நூல் தொல்காப்பிய எழுத்து இலக்கணத்தையும் சொல் இலக்கணத்தையும் சுருக்கமாக கூறுவதால் **'சின்னூல்'** என்று அழைக்கப்படுகிறது. இந்நூலை இயற்றியவர் குணவீர பண்டிதர் ஆவார்.

இவர் 'வச்சணந்தி மாலை' எனப்படும் வெண்பாப் பாட்டியல் நூலையும் இயற்றியுள்ளார். வெண்பாவால் அமைந்த நேமிநாதம் நூலைக் கற்ற பின்னரே தொல்காப்பியத்தைக் கற்கும் நடைமுறை இருந்தமை இந்நூலின் சிறப்பைப் புலப்படுத்துகிறது.

**நன்னூல்**


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

இந்நூலை இயற்றியவர் **பவணந்திமுனிவர்**. தொல்காப்பியத்திற்கு அடுத்தபடியாக மிகுதியாக பயன்பாட்டில் இருக்கும் இலக்கண நூல் நன்னூல் ஆகும். தொல்காப்பியத்தில் தெளிவும் எளிமையும் இருக்கும். நன்னூலில் செறிவும் சுருக்கமும் இருக்கும். நன்னூலில் எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் உள்ளன. இந்நூல் அமைந்துள்ள பொதுப்பாயிரமானது (முகவுரை) நல்ல நூலுக்குரிய இலக்கணம், பத்து அழகு, பத்துக் குற்றம், நல்லாசிரியர், ஆசிரியர் ஆகாதவர் ஆகியோரது இலக்கணம், நல்ல மாணாக்கர், மாணாக்கர் ஆகாதவரின் இயல்புகள், பாடம் கற்பிக்கும் முறை, கற்கும் முறை ஆகியன குறித்து விரிவாக் கூறியுள்ளது. தொல்காப்பியத்தின் பாயிர உரை மேற்கோள்கள், இந்நூலில் இலக்கண சூத்திரங்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

இந்நூலின் எழுத்து அதிகாரத்தில் உள்ள பதவியல் சொற்களின் கட்டமைப்பு தெளிவாக விளங்குகிறது. பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம் என்ற சொற்களைப் பகுத்துள்ளது.

இந்நூலின் சொல்லதிகாரத்தில் இடம் பெற்றுள்ள,

"பழையன கழிதலும் புதியன புகுதலும்

வழுவல கால வகையி னானே"

என்ற நூற்பா வழக்கிழந்த இலக்கணக் கருத்துக்களை ஏற்றுக் கொள்வதும் தவறல்ல: காலந்தோறும் ஏற்படும் மாற்றத்திற்கு உட்பட்டதே என்று கூறுகிறது.

இந்நூலுக்கு மயிலைநாதர், சங்கர நமச்சிவாயர், சிவஞான முனிவர், ஆறுமுக நாவலர் முதலானோர் உரை எழுதியுள்ளனர்.

### நம்பியகப்பொருள்

அகப்பொருள் சார்ந்த இந்நூலை இயற்றியவர் நம்பி என்பராவார். இந்நூலில் அகத்திணையியல், களவியல், வரைவியல், கற்பியல், ஒழிபியல் என ஐந்து இயல்கள் உள்ளன.

தொல்காப்பியத்தில் அகப்பொருள் இலக்கணகம் கதை மாந்தர்களின் கூற்று வகையாகச் கூறப்பட்டுள்ளது. நம்பியகப் பொருளில் அகப்பொருள் இலக்கணம் துறை வகையாக விளக்கிக் கூறப்பட்டுள்ளது. அக இலக்கிய நூல்களுக்கு இதன் அடிப்படையிலேயே துறை வகுக்கப்பட்டுள்ளது.

### இலக்கண விளக்கம்

இந்நூலை இயற்றியவர் **வைத்தியநாத தேசிகர்** ஆவார். இந்நூல் **எழுத்து, சொல், பொருள்** என்ற மூன்று அதிகாரங்களாக பகுக்கப்பட்டு ஐந்திலக்கணத்தையும் கூறுகிறது. தொல்காப்பியத்தைப் பின்பற்றி விரிவாக எழுதப்பட்டிருப்பதால் இந்நூல் **'குட்டி தொல்காப்பியம்'** எனப்படுகிறது.

### தொன்னூல் விளக்கம்

இத்தாலி நாட்டைச் சேர்ந்த **வீரமாமுனிவரால்** தமிழில் எழுதப்பட்ட இந்நூல் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்து இலக்கணங்களையும் கூறுகிறது. இந்நூல் ஆசிரியர் பெரும்பாலும் நன்னூலின் கருத்துகளையே அடிப்படையாகக் கொண்டு எழுதி உள்ளார்.

### பாட்டியல் நூல்கள்

சிற்றிலக்கியங்களின் அமைப்பு முதலானவற்றை விளக்க, பாட்டியல் நூல்கள் தோன்றின. இந்நூல்களுள் முதன்மையாக் கருதப்படுவது 'பன்னிரு பாட்டியல்' என்ற நூலாகும். இந்நூலில் எழுத்தியல், சொல்லியல், இனவியல் என்ற மூன்று இயல்கள் உள்ளன.

'வச்சணந்திமாலை' எனப்படும் வெண்பாபாட்டியல், நவநீத பாட்டியல், சிதம்பரம் பாட்டியல், இலக்கண விளக்கப் பாட்டியல் என்பன பிற முக்கிய பாட்டியல் நூல்களாகும்.

### உரைநடை வடிவிலான இலக்கண நூல்கள்

www.tnpscgroup4.in

19 - ஆம் நூற்றாண்டிற்கு பின்னர், உரைநடை வடிவில் இலக்கண நூல்கள் எழுதப்பட்டன. இலக்கணச் சுருக்கம், இலக்கணச்சுருக்க வினா விடை போன்றவை உரைநடை வடிவில் எழுதப்பட்டன. கால்டுவெல்லின் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்ற நூல் தமிழின் தனிச்சிறப்புகளை தமிழ் அறியாத மேல் நாட்டினருக்கும் எடுத்துக்காட்டி விளக்கியுள்ளது.

| வரிசை எண் | எழுத்ததிகாரம் | | பொருளதிகாரம் |
|---|---|---|---|
| 1. | நூல் மரபு | கிளவியாக்கம் | அகத்திணையியல் |
| 2. | மொழி மரபு | வேற்றுமையியல் | புறத்திணையியல் |
| 3. | பிறப்பியல் | வேற்றுமை மயங்கியல் | களவியல் |
| 4. | புணரியல் | விளி மரபு | கற்பியல் |
| 5. | தொகை மரபு | பெயரியல் | பொருளியல் |
| 6. | உருபியல் | வினையியல் | மெய்ப்பாட்டியல் |
| 7. | உயிர் மயங்கியல் | இடையியல் | உவமவியல் |
| 8. | புள்ளிமயங்கியல் | உரியியல் | செய்யு ளியல் |
| 9. | குற்றியலுகரப் புணரியல் | எச்சவியல் | மரபியல் |

www.tnpscgroup4.in



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in